(இ) நுண்ணறிவுதிறத் தொழில்கள் (Professions), வணிகத் தொழில்கள் (Trades) மரபுத் தொழில்கள், (callings), பணித்தொழில்கள் (Employments) ஆகியவற்றின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத்திறத் தொழில்கள் (Professions), வணிகத் தொழில்கள் (Trades), மரபுத் தொழில்கள் (Callings), பணித் தொழில்கள் (Employments), ஆகியவற்றின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

``1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள் (Professions), வணிகத் தொழில்கள் (Trades), மரபுத் தொழில்கள் (Callings), பணித்தொழில்கள் (Employments) ஆகியவற்றின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர்.